சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
முன்னிலை—திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ.,எல்எல்.எம்.,
சார்பு நீதிபதி,
2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் நாள் செவ்வாய்க்கிழமை
I.A.No.2/2023 in I.A.No.1/2019 in O.S.No.74/2013

1. தங்கராஜ்
2. அழகுமலை
3. பார்வதி
4. ஜெயலட்சுமி
5. ஜெயராமன்
6. தெய்வேந்திரன் ... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

—எதிரிடை—

1. வீரணன்
2. ராமன்
3. அனந்தாயி(இறப்பு)
4. மீனா
5. சங்கரலிங்கம்
6. வேல்முருகன்
7. பாக்கியலட்சுமி ... 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 7 எதிர்மனதாரர்கள் / பிரதிவாதிகள்
8. மொக்கப்பாண்டி
9. கந்தசாமி
10. பரமேஸ்வரி
11. வெள்ளையம்மாள்
12. சாந்தி
13. ஸ்ரீதேவி
14. கார்த்திகைசெல்வி
15. சரஸ்வதி
16. மீனாட்சி ... 8 முதல் 16 எதிர்மனுதாரர்கள் / சேர்க்கப்படவேண்டிய 8 முதல் 16 எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது 30.10.2024ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டு வரப்பட்டபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.ஆனந்தன் அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் அசல் மனுவிலேயே தோன்றாத்தரப்பினர்களாகியும், 3ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கந்தசாமி அவர்கள் ஆஜராகியும், 8 முதல் 16 எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாமல் தோன்றாத் தரப்பினர்களாகியும், இரு தரப்பு வாதம் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

<u>உத்தரவு</u>

இறந்துபோன 3ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளான 8 முதல் 16 எதிர்மனுதாரர்களை இ.ம.எண்.1/2019 மனுவில் 8 முதல் 16 எதிர்மனுதாரர்களாக சேர்த்துக் கொண்டு மனுவை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி CPC Order 22 Rule 4 and Section 151 CPC–ன் படி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்:</u>

அசல் வழக்கில் மனுதாரர்களின் தவறுகைக்காக வழக்கு தள்ளுபடியானதை மீண்டும் கோப்பிற்கு எடுக்கவும் மற்றும் காலதாமதத்தை மன்னிக்கவும் மனுதாரர்கள் மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். மேற்படி காலதாமதமனு இ.ம.எண்.1/2019 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளபோது மனுவில் கண்ட 3ம் எதிர்மனுதாரர் அனந்தாயி என்பவர் கடந்த 24.07.2023ம் தேதி இறந்துவிட்டார் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் மெமோ தாக்கல் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது. இறந்துபோன 3ம் எதிர்மனுதாரர் அனந்தாயி என்பவரின் கணவர் வெள்ளையன் ஏற்கனவே இறந்துவிட்டார். 3ம் எதிர்மனுதாரர் அனந்தாயி என்பவருக்கு மொக்கையன், கந்தசாமி, பெருமாள், மீனாட்சி, ஆகியோர்கள் மக்கள் ஆவார்கள். மேற்படி அனந்தாயி என்பவரின் மகன் பெருமாள் என்பவர் ஏற்கனவே இறந்துவிட்டார். பெருமாள் மனைவி பரமேஸ்வரி(10ம் எதிர்மனுதாரர்) ஆவார். பெருமாள் மக்கள் 11

முதல் 15 எதிர்மனுதாரர்கள் ஆவார்கள். பெருமாள் என்பவருக்கு 10 முதல் 15 எதிர்மனுதாரர்கள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். ஆகவே 3ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளான 8 முதல் 16 எதிர்மனுதாரர்களை இ.ம.எண்.1/2019 மனுவில் 8 முதல் 16 எதிர்மனுதாரர்களாக சேர்த்துக் கொண்டு மனுவை மேல்நடத்த உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

**3.** <u>4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்.</u>

இந்த எதிர்மனுதாரர்கள் அசல் மனுவில் 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள். மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். மேலும் 8 முதல் 16 எதிர்மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகள் என்று நிரூபிப்பதற்கு சட்டப்படியான இறப்புச்சான்று மற்றும் வாரிசுச்சான்றிதழ் ஏதும் இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி மனுவில், இறந்துபோன 3ம் எதிர்மனுதாரரின் மக்கள் மொக்கையன் (R8), கந்தசாமி (R9), பெருமாள், மீனாட்சி (R15) ஆகியோர்கள் ஆவார்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால் மனுவில் மீனாட்சி என்பவர் (லேட்) கந்தசாமி மனைவி க.மீனாட்சி என்று குறிப்பிட்டுள்ளனர். எனவே மீனாட்சி என்பவர் யாருடைய வாரிசு என்று சரியாக இம்மனுவில் குறிப்பிடவில்லை மற்றும் அபிடவிட்டில் மீனாட்சி (R15) என்றும் மனுவில் மீனாட்சி (R16) என்றும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் மனுவில், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை தாலுகா, பாலையம்பட்டி அஞ்சல், பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வரும் (லேட்) கந்தசாமி மனைவி இந்து சுமார் 52 வயதுள்ள க.மீனாட்சி என்று குறிப்பிட்டுள்ளனர். மேற்படி விலாசத்தில் க. மீனாட்சி என்பவர் எந்த ஊர் என்று குறிப்பிடவில்லை. எனவே அசல் மனுவில் இறந்துபோன 3ம் எதிர்மனுதாரர் அனந்தாயி அவர்களின் வாரிசுகள் என்பதை சட்டப்படி நிரூபணம் செய்ய உரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத பட்சத்தில் இம்மனு சட்டப்படி தள்ளுபடி செய்யத்தக்கதாய் இருக்கிறது. எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**4.** இம்மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

**5.** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**6**. அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மனுதாரர்கள் / வாதிகளால், அசல் வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு, வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் வா.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால், மனுதாரர்கள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை எனக் கருதி அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேலும் அவ்வாறு தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கக் கோரி மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.1/2019 தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், மேற்படி மனுவின் 3 ம் எதிர்மனுதாரரான அனந்தாயி என்பவர் 24.07.2023 அன்று இறந்துவிட்டதாகவும், மேற்படி அனந்தாயிக்கு 8 முதல் 16 எதிர்மனுதாரர்கள் வாரிசுகளாக இருக்கிறார்கள் எனவும், எனவே, இறந்துபோன 3 ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் என்ற முறையில் மனுவுடன் தாக்கல் செய்துள்ள 8 முதல் 16 வரை எதிர்மனுதாரர்களை, இ.ம.எண்.1/2019 மனுவில் 8 முதல் 16 எதிர்மனுதாரர்களாக சேர்த்துக் கொண்டு மேற்படி மனுவினை மேல்நடத்த உத்தரவிட வேண்டும் என மனுதாரர் தரப்பில் கோரப்பட்டுள்ளது. ஆனால், 8 முதல் 16 எதிர்மனுதாரர்கள் 3 ம் எதிர்மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகள் என்று நிரூபிப்பதற்கு சட்டப்படியான ஆவணங்கள் ஏதும் இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை எனவும், 16 ம் எதிர்மனுதாரரான மீனாட்சி என்பவர் குறித்து மனுவில் சரியாக குறிப்பிடவில்லை எனவும் 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

**7.** அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேலும் மனுதாரர்களின் தவறுகைக்காக அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, மேற்படி அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுப்பதில் ஏற்பட்ட

காலதாமதத்தை மன்னிக்கக்கோரி மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.1/2019 மனுத்தாக்கல் செய்துள்ள நிலையிலும், இ.ம.எண்.1/2019 மனுவில் முழுமையான தீர்வு காண இறந்துபோன நபரின் வாரிசுகளை கட்சி சேர்த்து இருதரப்பையும் தீர விசாரிப்பது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில், இறந்துபோன 3ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை நிரூபிக்க சட்டப்படியான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என ஆட்சேபணை செய்யப்பட்டிருந்தாலும், 8 முதல் 16 எதிர்மனுதாரர்கள் மேற்படி இறந்துபோன 3ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் கிடையாது என்பதாக மறுத்து எவ்வித மறுப்புரையும் குறிப்பிட்டு எவ்வித சங்கதியும் மறுப்புரையில் கூறவில்லை என தெரியவருகிறது. மனு மற்றும் அபிடவிட்டில் எந்தவித தவறுகளும் இல்லாத சூழ்நிலையில், அதில் பல தவறுகள் உள்ளதுபோல எதிர்மனுதாரர்கள் தரப்பில் தேவையில்லாத குற்றச்சாட்டுகளை சொல்லியுள்ளதாக இந்நீதிமன்றம் காண்கிறது. இந்த மனுவை ஆட்சேபணை செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே பெயரளவிலான ஆட்சேபணையை எதிருரையில் சொல்லியுள்ளதாக தெரிய வருகிறது. எனவே, எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களின் மனுவினை மறுத்து பெயரளவில் மறுப்புரை தாக்கல் செய்துள்ள நிலையிலும், இறந்துபோன 3ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் சம்பந்தமாக 4 முதல் 7 எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் குறிப்பிட்டு கூறாத சூழ்நிலையிலும், இறந்துபோன 3ம் எதிர்மனுதாரருக்கு 8 முதல் 16 எதிர்மனுதாரர்களை இ.ம.எண்.1/2019 மனுவில் கட்சி சேர்க்க உத்தரவிடலாம் எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்களை கருத்தில் கொண்டு, இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8.** இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்த பின்னர், என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

J SELVAN JESU RAJA
Digitally signed by J SELVAN JESU RAJA

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

மனுதாரர்தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை.
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை.

J SELVAN JESU RAJA
Digitally signed by J SELVAN JESU RAJA

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
I.A.No.2/2023 in I.A.No.1/2019 in
O.S.No.74/2013
உத்தரவு நாள் –12.11.2024